**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.**

**O.S.No. 661/2020** **P.W.1**

Deposition of witness for solemnly affirmed by Tmt.S.Sangeetha,Assistant of this court on 24.06.2026 in accordance with the provision of the Act 1873.

| | |
|---|---|
| Name: | காமாட்சி |
| Husband Name: | கருப்பழகி |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது கூடுதல் பிரமாணப்பத்திரிக்கையுடன் வா.சா.ஆ.4 முதல் 6 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 முதல் 6 ஆவணங்களுக்கும் எனக்கும் என்ன சம்மந்தம் என்றால் சொத்தை பணம் கொடுத்து வாங்கியதற்கான ஆவணங்களாகும். மேற்படி ஆவணங்களில் செல்வராசு என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் சூசை மகன் ஆவார். மேற்படி செல்வராசு என்பவருக்கும் எனக்கும் என்ன உறவுமுறை என்றால் செல்வராசிடமிருந்து பணம் கொடுத்து கிரையம் பெற்ற வகையில் பழக்கம். மேற்படி செல்வராசிடமிருந்து கிரயம் பெற்றதற்கான உரிமை ஆவணங்கள் உள்ளதா என்றால் கந்தாய ரசீதுதான் உள்ளது. அதைத்தவிர வேறு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. வருவாய் ஆவணங்களில் தாவா சொத்து பாறை என வகைபாடு செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் தாவா சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டுள்ளதை நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொள்ளவில்லை. தாவா சொத்தில் மண் வெட்டி எடுக்க அரசு தரப்பில் 5 ஆண்டுகளுக்கு டெண்டர் எடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் கிழக்கில் உள்ளது.

தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கருக்கு மேலிருக்கும். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் அனுபவித்து வருவதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்தை செல்வராசு என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாக சொல்வது பொய் என்றும், உரிமை ஆவணங்கள் இல்லை என்றும் அப்படியிருந்தால் அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. செல்வராசு எனக்கு உறவினரா என்றால் இல்லை.

நானும், செல்வராசும் அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் போலியாக ஆவணங்கள் தயாரித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்து கிரையம் பெற்றதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை எந்த வருடத்தில் நான் கிரையம் பெற்றேன் என்றால் 1990ம் வருடத்தில் கிரையம் பெற்றேன். மேற்படி கிரையப்பத்திரத்தின் அடிப்படையில்தான் உரிமை கேட்கிறேனா என்றால் ஆமாம். மேற்படி கிரையப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையப்பத்திரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமையில்லாத நிலையில், பொய்யான சங்கதிகள் கண்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடியாகக் கூடியது என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை –இல்லை.</u>

**Sd/-E.Ridhula** **Sd/Kamatchi(PW1)**
**DM,SDM.**